# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.163 of 2025
Prosecution Witness No.P.W.5 (L.W.1)

| | |
|---|---|
| Name | **ரேவதி என்கிற சசிரேகா** |
| Father/Husband Name | **R.B.ராமன்** |
| Calling/Occupation | House Wife |
| Age | 57 |
| Address | No.107, Arni Road, Sankaranpalayam, Vellore District. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.06.2026.

( Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் சங்கரன்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் எண்.107, ஆரணி ரோடு, சங்கரன்பாளையம் என்ற விலாசத்தில் குடும்பத்துடன் வசித்து வந்தேன். அந்த வீட்டின் கீழ் தளத்தில் வீட்டின் உரிமையாளர் குடியிருக்கிறார், நான் குடும்பத்துடன் முதல் தளத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 28.01.2022 அன்று மாலை சுமார் 06.45 மணி அளவில் நான் வீட்டில் தனியாக இருந்தபோது Helmet போட்டுக்கொண்டு ஒரு நபர் வீட்டிற்குள் வந்து என் கழுத்தில் கத்தியை வைத்து என் செயினை அறுத்துவிட்டார்.

நான் சத்தம் போட்டேன். கீழே இருந்தவர்கள் எல்லாம் ஓடி வந்தார்கள். அதற்குள் 4 சவரன் செயினை அவர் பறித்துக்கொண்டு போய்விட்டார். Helmet அணிந்திருந்தவரின் கண் மற்றும் முகம் தெரிந்தது. அந்த Helmet–ஆனது முன் பக்கம் முழுவதும் கண்ணாடி இருந்ததால் எதிரியின் முகம் எனக்கு தெரிந்தது. அந்த Helmet–ல் இருந்த கண்ணாடி சிறிய அளவில் இருந்தது. அதனால் அவரின் முகம் எனக்கு தெரிந்தது. ஆஜர் எதிரி கீழே இறங்கி ஓடியவுடன் கம்பி கடையில் இருந்த இரண்டு நபர்கள் வந்தார்கள். தடுக்க வந்த இரண்டு நபர்களையும் கத்தியால் வெட்டிவிட்டு ஓடிவிட்டார். தடுக்க வந்த இரண்டு நபர்கள் பெயர் ராஜ்குமார் மற்றும் சரவணன் ஆகும். எதிரி ஆக்டிவா என்ற இருசக்கர வாகனத்தில் தப்பி சென்றுவிட்டார். என் கணவர் ஆரணியில் இருந்தார் நான் அவருக்கு உடனே தகவல் சொன்னேன். எதிரி தப்பித்து சென்று இருசக்கர வாகனத்தை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும்.

என்னிடம் காண்பிக்கப்படும் Helmet தான் சம்பவத்தின்போது எதிரி அணிந்திருந்ததாகும். அந்த **Helmet சா.பொ. 1** ஆகும். பின்னர் நானும் என் கணவரும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் என்னிடம் காண்பிக்கப்படுவது. **அந்த புகார் அ.த.சா.ஆ.6** ஆகும். 03.02.2022 அன்று போலீசார் வரச்சொன்னத்தின் பெயரில் நான் காவல் நிலையம் சென்று என்னிடமிருந்து பறித்து சென்ற செயினை அடையாளம் காண்பித்தேன்.

நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து என்னிடமிருந்து எதிரி பறித்து சென்ற செயினை இரண்டு துண்டுகளாக இருந்ததை பெற்றுக்கொண்டேன். இன்று நீதிமன்றத்தில் அதை ஆஜர் செய்கிறேன். அந்த செயினை நான் இரண்டு துண்டாக இருந்ததை ஒன்றாக சேர்த்து தற்போது பயன்படுத்தி வருகிறேன். அந்த **தங்க செயின் சா.பொ. 2** ஆகும். மேற்கண்ட தங்க செயின் இந்த நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டு மீண்டும் அந்த செயின் சாட்சியின் வசமே ஒப்படைக்கப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

(சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனத்தை எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாததால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.06.02 17:24:19 +0530